எனது இலக்கம் : PTF/01/BIP Meetings/01
திகதி : 2021.03.17

சகல மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள்,
பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள்,
கெபினட் அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு

**"கிராமத்துடனான உரையாடல் ஊடாக வேலைத்திட்டங்களுடன் மீண்டும் கிராமத்திற்கு - 2021 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளைச் செயற்படுத்தல்"**

**தேசிய ஒருங்கிணைப்பு உபகுழுக்கள் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்பு உபகுழுக்களின் கூட்டங்கள்**

புதிய அபிவிருத்தி அணுகுமுறையொன்றுக்கு வழியேற்படுத்தும் வகையில், கிராமியப் பொருளாதார மற்றும் தேசிய பொருளாதார அபிவிருத்தி இலக்குகளைத் துரிதமாக அடைந்துகொள்ளும் நோக்குடன், கெபினட் மற்றும் இராஜாங்க அமைச்சர்களை உள்ளடக்கிய தேசிய ஒருங்கிணைப்பு உபகுழுக்கள் தாபிக்கப்பட்டன. அத்துடன், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களின் தலைமையில் மற்றும் பிரதேச அரச அதிகாரிகளை உள்ளடக்கியதாக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் கீழ் பிரதேச ஒருங்கிணைப்பு உபகுழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன.

02. கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள கிராமியக் குழுக்களினால் இனங்காணப்பட்டுள்ள கிராமிய அபிவிருத்தி முன்மொழிவுகளின் முன்னுரிமைக்கு ஏற்ப பட்டியலிடப்பட்டு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு உங்களது அமைச்சின் கீழ் வருகின்ற அபிவிருத்தி முன்னுரிமைகள் பிரதேச செயலாளர்களினால் அமைச்சுக்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. தற்போது தகவல் அமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள அந்த அபிவிருத்தி முன்னுரிமைகளை செயலணியினாலும் அமைச்சுக்களுக்கு வழங்க எதிர்பார்க்கிறேன். உங்களது அமைச்சுக்களினால் அந்த அபிவிருத்தி முன்னுரிமைகளை ஆராய்ந்து, அங்கீகரிக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி முன்னுரிமைகளை 2021-2023 மத்திய கால அபிவிருத்தித் திட்டங்களினுள் துரிதமாக உள்ளடக்கி ஏற்புடைய பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும், பிரதேச அபிவிருத்தி முன்னுரிமைகளைச் செயற்படுத்தும்போது ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மாவட்ட

ஒருங்கிணைப்புக் குழுக்கள் மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு உபகுழுக்களுக்கு நேரடியாக சமூகமளித்து விடயங்களை முன்வைக்க பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

03. சகல கெபினட் அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களினதும் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் தலைவர்கள் தமது பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்திலான அதிகாரிகளை பிரதேச அபிவிருத்தி உபகுழுக் கூட்டங்களுக்கு தேவைக்கேற்ப பங்கேற்கச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதன் மூலம் தமது நிறுவனங்கள் ஊடாக பிரதேச மட்டத்தில் செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு மற்றும் அபிவிருத்தித் தேவைப்பாட்டு ஆவணங்களை இலகுவாக இற்றைப்படுத்துவதற்கு வழியேற்படும். பிரதேச மட்டத்திலான அதிகாரிகளின் செயல்திறனை அளவிடும்போது அளவுகோலாக தமது நிறுவனத்தின் கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு வழங்கியுள்ள பங்களிப்பு மற்றும் பிரதேச ஒருங்கிணைப்பு உபகுழுக் கூட்டங்களில் அவர்களின் பங்கேற்பைக் கருத்திற்கொள்வது தொடர்பாக கவனஞ் செலுத்துவது முக்கியமானதாகும்.

04. கெபினட் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் தலைவர்களை தேசிய ஒருங்கிணைப்பு உபகுழுக் கூட்டங்களுக்கு குழுத் தலைவர்களின் அறிவுறுத்தலின்படி தேவைக்கேற்ப உபகுழுச் செயலாளர்களினால் அழைக்க முடியும். மேலும், அந்த நிறுவனங்களின் தலைவர்களுக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் தமது துறைக்கு ஏற்புடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அந்த தேசிய ஒருங்கிணைப்பு உபகுழுக் கூட்டங்களில் பங்குபற்ற முடியும்.

05. தேசிய ஒருங்கிணைப்பு உபகுழுக்களினால் 2021 ஆம் ஆண்டிற்கான கூட்டங்களின் கால அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. உங்களது தகவலுக்காக அதனை இதனுடன் அனுப்பிவைக்கிறேன். அத்துடன், ஒவ்வொரு பிரதேச ஒருங்கிணைப்பு உபகுழுக் கூட்டங்களுக்குமான வருடாந்த கால அட்டவணையை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களின் தலைமையில் தயாரித்து பிரதேச நிறுவனத் தலைவர்களுக்கு வழங்குவதன் மூலம் மிகவும் சிறப்பாகவும், திட்டமிடலுடனும் பிரதேச அபிவிருத்திப் பணிகளை வழிநடாத்த முடியும்.

அரச கட்டமைப்பினுள் நிறுவனங்களை வெவ்வேறாகத் தயாரித்து செயற்படுத்துகின்ற அபிவிருத்தித் திட்டங்களை பிரதான ஐந்து (5) துறைகள் ஊடாக இணைத்து புதிய

அபிவிருத்தி அணுகுமுறையொன்று மூலம் பெறுபேறுகளை அடைந்துகொள்ள அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிக்கு நீங்கள் வழங்கும் பங்களிப்பு மற்றும் உங்களது அர்ப்பணிப்பினை மிகவும் மதிக்கிறேன்.

**அன்டன் பெரேரா**

பிரதம அமைச்சரின் மேலதிக செயலாளர்
இணைச் செயலாளர் - பொருளாதாரப் புத்தெழுச்சி மற்றும்
வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணி

பிரதிகள்:

1. தேசிய ஒருங்கிணைப்பு உபகுழுக்களின் செயலாளர்கள்
2. மாவட்டச் செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள்
3. பிரதேச செயலாளர்கள்

} தயவுடன் தகவலுக்காக

## தேசிய ஒருங்கிணைப்பு உபகுழுக் கூட்டங்கள் - வருடாந்த கால அட்டவணை 2021

| # | உபகுழு | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | கமத்தொழில் உபகுழு @ நிலமெதுர | 18 வியாழக் கிழமை பி.ப.5.00 | 10 புதன் கிழமை பி.ப.2.00 | 22 வியாழக் கிழமை பி.ப.2.00 | 13 வியாழக் கிழமை பி.ப.2.00 | 17 வியாழக் கிழமை பி.ப..2.00 | 15 வியாழக் கிழமை பி.ப.2.00 | 12 வியாழக் கிழமை பி.ப.2.00 | 16 வியாழக் கிழமை பி.ப.2.00 | 14 வியாழக் கிழமை பி.ப.2.00 | 18 வியாழக் கிழமை பி.ப.2.00 | 16 வியாழக் கிழமை பி.ப.2.00 |
| 2. | வாழ்வாதார உபகுழு @ நிலமெதுர | 17 புதன் கிழமை பி.ப.2.00 | 17 புதன் கிழமை பி.ப.2.00 | 21 புதன் கிழமை பி.ப.2.00 | 12 புதன் கிழமை பி.ப.2.00 | 09 புதன் கிழமை பி.ப..2.00 | 14 புதன் கிழமை பி.ப.2.00 | 11 புதன் கிழமை பி.ப.2.00 | 08 புதன் கிழமை பி.ப.2.00 | 13 புதன் கிழமை பி.ப.2.00 | 10 புதன் கிழமை பி.ப.2.00 | 08 புதன் கிழமை பி.ப.2.00 |
| 3. | உட்கட்டமைப்பு வசதிகள் உபகுழு @ மக நெகும மஹ மெதுர | 17 புதன் கிழமை பி.ப.2.30 | 17 புதன் கிழமை பி.ப.2.30 | 28 புதன் கிழமை பி.ப.2.30 | 25 செவ்வாய்க் கிழமை பி.ப.2.30 | 16 புதன் கிழமை பி.ப.2.30 | 28 புதன் கிழமை பி.ப.2.30 | 25 புதன் கிழமை பி.ப.2.30 | 15 புதன் கிழமை பி.ப.2.30 | 27 புதன் கிழமை பி.ப.2.30 | 17 புதன் கிழமை பி.ப.2.30 | 15 புதன் கிழமை பி.ப.2.30 |
| 4. | சமூக உட்கட்டமைப்பு வசதிகள் உபகுழு @ கல்வியமைச்சு | - | 03 புதன் கிழமை மு.ப. 11.30 | 06 செவ்வாய் க்கிழமை மு.ப. 11.15 | 04 செவ்வாய்க் கிழமை மு.ப.11.15 | 01 செவ்வாய்க் கிழமை மு.ப.11.15 | 06 செவ்வாய்க் கிழமை மு.ப.11.15 | 03 செவ்வாய்க் கிழமை மு.ப.11.15 | 07 செவ்வாய்க் கிழமை மு.ப.11.15 | 05 செவ்வாய்க் கிழமை மு.ப.11.15 | 02 செவ்வாய்க் கிழமை மு.ப.11.15 | 07 செவ்வாய்க் கிழமை மு.ப.11.15 |
| 5. | பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சமூக அபிவிருத்தி உபகுழு @ SLIDA சங்கதனீ மண்டபம் | 25 வியாழக் கிழமை பி.ப.2.30 | 12 வெள்ளிக் கிழமை பி.ப.2.30 | 09 வெள்ளிக் கிழமை பி.ப.2.30 | 07 வெள்ளிக் கிழமை பி.ப.2.30 | 11 வெள்ளிக் கிழமை பி.ப.2.30 | 09 வெள்ளிக் கிழமை பி.ப.2.30 | 06 வெள்ளிக் கிழமை பி.ப.2.30 | 10 வெள்ளிக் கிழமை பி.ப.2.30 | 08 வெள்ளிக் கிழமை பி.ப.2.30 | 12 வெள்ளிக் கிழமை பி.ப.2.30 | 10 வெள்ளிக் கிழமை பி.ப.2.30 |